# பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் (STIs) மற்றும் இரத்தப்போக்கு வைரஸ்கள் (BBV கள்) என்றால் என்ன?

***பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் (STIs) மற்றும் இரத்தப்போக்கு வைரஸ்கள் (BBV கள்) யாரையும் பாதிக்கலாம்.***

சில நோய்த்தொற்றுகள் குணப்படுத்தப்படலாம், சில தாமாகவே குணமாகலாம். மற்றவை வாழ்நாள் முழுவதும் நீடிக்கலாம். நோய்த்தொற்றிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள நீங்கள் செய்யக்கூடிய விஷயங்கள் உள்ளன.

## STI மற்றும் BBV எவ்வாறு பரவுகின்றன?

பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் முக்கியமாக அந்த நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் உடலுறவு கொள்வதால் பரவுகிறது. நோய்த்தொற்றுகள் வழக்கமாக இந்த பாலியல் திரவங்கள் மூலம் பரவுகின்றன:

- விந்து (கம்)
- யோனி திரவங்கள்
- குதவழி திரவங்கள் (ஒரு நபரின் அடிப்பகுதியிலிருந்து)

## பல வகையான STI க்கள் உள்ளன:

- வைரஸ்கள் (உதாரணமாக: ஹெர்பிஸ் மற்றும் HPV)
- பாக்டீரியா (உதாரணமாக: கிளமிடியா, கோனோரியா மற்றும் சிஃபிலிஸ்)
- ஒட்டுண்ணிகள் (உதாரணமாக: ட்ரைகோமோனாஸ்)
- பூச்சிகள் (உதாரணமாக பொச்சுப் பேன்)

‘இரத்தத்தால் பரவும்’ என்பது இரத்தத்தில் நோய்த்தொற்று உள்ளதாகும். பாதிக்கப்பட்ட நபரின் ரத்தம் உங்கள் இரத்தத்தில் நுழையும் போது BBV கள் முக்கியமாக பரவுகின்றன.

சில BBV க்கள் STI க்களும் கூட. உதாரணமாக, மனித நோயெதிர்ப்புத் திறன் வைரஸ் (எச்.ஐ.வி) இரத்தத் தொடர்பு மற்றும் பாலியல் திரவங்கள் மூலம் பரவலாம்.

# பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் (STIs) மற்றும் இரத்தப்போக்கு வைரஸ்கள் (BBV கள்) என்றால் என்ன?

## STI க்கள் மற்றும் BBV களைப் பெறுவதற்கான ஆபத்தை நான் எவ்வாறு குறைக்க முடியும்?

STI க்களால் நீங்கள் பாதிக்கப் படும் ஆபத்தை பாதுகாப்பான உடலுறவு மூலம் குறைக்கலாம். பாதுகாப்பான உடலுறவு என்பது எந்த வகையான உடலுறவின் (யோனி வழி, குத வழி மற்றும் வாய் வழி) போதும் தடைகளை பயன்படுத்துவது, உதாரணமாக ஆணுறை.

பாலியல் பொம்மைகளை பகிர்ந்துக் கொண்டால் ஒரு புதிய ஆணுறை தேவை.

STI களை தடுப்பதில் ஆணுறைகள் 100% பயனுள்ளவை அல்ல. பரிசோதனையைப் பற்றி உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸிடம் பேசுங்கள்.

## ஒரு STI அல்லது BBV எனக்கு உள்ளதா என்பதை நான் எவ்வாறு அறிந்துக் கொள்ள முடியும்?

சீரான இடைவெளிகளில் பரிசோதனை செய்துக் கொள்வதே உங்களுக்கு STI அல்லது BBV உள்ளதா என்று அறிந்துக் கொள்வதற்கு சிறந்த வழி

தங்களுக்கு அறிகுறிகள் ஏதும் இல்லாதலால் பலருக்கு அவர்களுக்கு ஒரு STI அல்லது BBV உள்ளதா என்றே தெரியாது. சிலருக்கு கீழ்கண்ட அறிகுறிகள் போல் இருக்கலாம் :

- யோனி, ஆண்குறி அல்லது குதம் சுற்றி அரித்தல்
- மூத்திரம் (மலம்) கழிக்கும் பொழுது வலி
- யோனி, ஆண்குறி அல்லது குதத்திலிருந்து நாற்றமுள்ள அல்லது விசித்திரமான வண்ணம் கொண்ட வெளியேற்றம் (திரவம்)
- உடலுறவு கொள்ளும் பொழுது வலி
- யோனியில் அசாதாரண இரத்தப்போக்கு




*STI கள் மற்றும் BBV களில் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள ஆணுறை அணியுங்கள்*



*BBVக்கள் பரவும் வழிகளைப் பற்றிய படங்கள்]*

# பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் (STIs) மற்றும் இரத்தப்போக்கு வைரஸ்கள் (BBV கள்) என்றால் என்ன?

## STI க்கள் மற்றும் BBV களைப் பெறுவதற்கான ஆபத்தை நான் எவ்வாறு குறைக்க முடியும்?

BBV களால் நீங்கள் பாதிக்கப் படும் ஆபத்தை இவை மூலம் குறைக்கலாம்:

- சீரான இடைவெளிகளில் பரிசோதனை மூலம்
- ஒவ்வொறு முறை உடலுறவு கொள்ளும் போதும் சரியான முறையில் ஆணுறை உபயோகிப்பதின் மூலம் (யோனி வழி, குத வழி மற்றும் வாய் வழி)
- ப்ரெப் பற்றி உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸிடம் பேசுங்கள்.
- ஊசி உபகரணங்கள், ரேசர்கள், நகக் க்ளிப்பர்களை பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களில் மட்டுமே பச்சை மற்றும் துளைகள் குத்திக்கொள்வது

## STI அல்லது BBVக்கான பரிசோதனை நான் எத்தனை முறை மேற்கொள்ள வேண்டும்?

- 100% நேரம் ஆணுறைகளை உபயோகித்தாலும், நீங்கள் 30 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால், ஒரு வருடத்திற்கு ஒரு முறை சோதிக்கவும்
- நீங்கள் மற்ற ஆண்களுடன் உடலுறவு வைத்திருக்கும் ஆணாக இருந்தால், உங்களுடைய ஆபத்தை பொறுத்து, 3 மாதங்களுக்கு ஒரு முறை சோதித்துப் பாருங்கள்
- ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் கூடிய சீக்கிரம்
- நீங்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக கவலையாக இருந்தால்

## STI அல்லது BBV எனக்கு இருப்பதாக நான் நினைத்தால் நான் என்ன செய்வது?

நீங்கள் ஒரு STI அல்லது BBV உங்களுக்கு இருப்பதாக நினைத்தால், உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸிடம் தேவைப்பட்டால் பரிசோதனைகள் செய்து சிகிச்சைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சிகிச்சையளிக்கப்படாவிட்டால் சில நோய்த்தாக்கங்கள் கடுமையான உடல்நலப் பிரச்சனைகளை ஏற்படுத்தும். உதாரணமாக, சிகிச்சையளிக்கப்படாத நோய்த்தொற்றுகள் கருவுறாமைக்கு வழிவகுக்கலாம் (குழந்தைகள் பெற இயலாமை). ஆரம்பத்தில் கண்டுப்பிடித்தால் பல STI க்களுக்கு எளிதில் சிகிச்சையளிக்கப்படலாம்.

பாதுகாப்பான உடலுறவுக் கொள்ளுங்கள் மற்றும் உங்கள் உடலில் அல்லது வேறு ஒருவரின் உடலில் இரத்தம் செலுத்தக்கூடிய எந்த உபகரணத்தையும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

# பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்த்தொற்றுகள் (STIs) மற்றும் இரத்தப்போக்கு வைரஸ்கள் (BBV கள்) என்றால் என்ன?

## நான் உடலுறவு கொள்ளும் நபருக்கு (அல்லது துணைவருக்கு) ஒரு STI அல்லது ஒரு BBV உள்ளதாக கண்டறியப்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு, நீங்கள் உடலுறவு கொள்ளும் துணைவருக்கு ஒரு STI அல்லது BBV உள்ளதென்று கண்டறியப்பட்டிருப்பதாக ஒரு தொலைபேசி அழைப்பு, உரை செய்தி, கடிதம் அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படலாம்.

உங்களுக்கும் நோய்த்தொற்று ஏற்பட்டு, அறிகுறிகள் ஏதும் இல்லாத காரணத்தால், நீங்கள் அதைப் பற்றி அறியாமலும் இருக்கலாம். உங்கள் மருத்துவர் அல்லது நர்ஸைப் பார்த்து தேவைப்பட்டால் பரிசோதனைகள் செய்து சிகிச்சைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மேலும் விவரங்களுக்கு :

- உங்கள் மருத்துவரை அல்லது நர்ஸை அணுகவும்
- Family Planning Victoria's clinic [விக்டோரியா குடும்பக் கட்டுப்பாட்டு க்ளினிக்]கை அணுகவும்
- STI அல்லது BBV சோதனையைப் பெறும் போது நீங்கள் எதிர்பார்க்கக்கூடியவற்றை பற்றி படியுங்கள்t

## நீங்கள் இவற்றை பார்க்க ஆர்வமாக இருக்கலாம்:

பாலியல் சுகாதார சேவைகளை அணுகும் இளைஞர்களைப் பற்றிய வீடியோவைக் காண இந்த இணைப்பைக் கிளிக் செய்யுங்கள்.

MULTICULTURAL CENTRE FOR WOMEN'S HEALTH

family planning victoria
Reproductive & Sexual Health
Care. Education. Advocacy.

*கூற்று: Multicultural Centre for Women's Health. [மகளிர் நலனுக்கான பல கலாச்சார மையத்தின்] ஆலோசனை மற்றும் ஒப்புதலுடன் இந்தத் தகவல் தயாரிக்கப்பட்டுள்ளது. துறவுரை: இந்த தகவல் இதழ் பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. தனிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து, இதுபோன்ற பொதுத் தகவலின் பொருத்தமானது நபர் நபருக்கு மாறுபடும். உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு குறிப்பிட்ட மருத்துவ அல்லது சட்ட ஆலோசனையை நீங்கள் பெற வேண்டும். பதிப்புரிமை © இந்தக் தகவல் இதழின் தகவல்களின் பதிப்புரிமை Family Planning Victoria க்கு (அல்லது, சில சந்தர்ப்பங்களில், மூன்றாம் தரப்பினருக்கு) சொந்தமானது மற்றும் பதிப்புரிமை சட்டம் 1968 க்கு உட்பட்டது. நீங்கள் இலாப நோக்கமற்ற கல்வி நிறுவனமாக இருந்தால், தகவல்களுக்கான துறவுரையை நீங்கள் சேர்த்துக் கொண்டால், எங்கள் பதிப்புரிமைக் கொண்ட தகவல்களை உங்கள் மாணவர்களுக்கு அளிக்கும் பொருட்டு, இனப்பெருக்கம் செய்யவோ அல்லது பகிர்ந்துக் கொள்ளவோ அனுமதிக்கிறோம். எங்கள் ஒப்புதல் படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்து சமர்ப்பதின் மூலம் எங்களுடைய எந்தவொரு உள்ளடக்கத்தின் இனப்பெருக்கம் அல்லது தகவல்தொடர்பு செய்ய எங்கள் முன் ஒப்புதல் பெறுவது தேவை.*